செ.வெ.எண்: 62 நாள்:23.08.2016

# பத்திரிகைச் செய்தி

**குழந்தைகள் காப்பகங்களுக்கு காப்பக பணியாளர் மற்றும் சமையலருடன் இணைந்த உதவியாளர் நியமனம்.**

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், புதுக்கோட்டை மாவட்டத்தில் 13 வட்டாரங்களில் குழந்தைகள் காப்பகங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த காப்பகங்களுக்கு காப்பக பணியாளர் மற்றும் சமையலருடன் இணைந்த உதவியாளர் பணி நியமனத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. காப்பக பணியாளருக்கு மாதத் தொகுப்பூதியம் ரூ.3000/- மற்றும் சமையலருடன் இணைந்த உதவியாளர் பணிக்கு மாதத்தொகுப்பூதியம் ரூ.1500/- வழங்கப்படும். இப்பணி முற்றிலும் தற்காலிகமானது.

குழந்தைகள் காப்பக பணியாளர்களுக்கான தகுதிகள் : (01.08.2016 அன்றுள்ளவாறு)

1.விண்ணப்பதாரர் 25 வயதிற்கு மேல் 35 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

2.எஸ்.எஸ்.எல்.சி.,தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

3.குழந்தைகள் காப்பகம் அமைந்துள்ள ஊராட்சி மற்றும் நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

01.08.2016 அன்று குழந்தைகள் காப்பக சமையலருடன் இணைந்த உதவியாளர் பணிக்கான தகுதிகள்.

1. விண்ணப்பதாரர் 20 வயதிற்கு மேல் 40 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

2.தமிழில் எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

3.குழந்தைகள் காப்பகம் அமைந்துள்ள ஊராட்சி மற்றும் நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

| வ. எண். | வட்டாரம் | குழந்தைகள் காப்பகம் பெயர் | Communal Rotation | Reservation and Priority/ Non Priority. |
|---|---|---|---|---|
| 1. | அன்னவாசல் | இலுப்பூர் நாயுடு தெரு | G.T. | Non Priority |
| 2. | அறந்தாங்கி | எல்.என்.புரம்-1 | SC(A) | W Des-Wid |
| 3. | அரிமளம் | மீனாட்சிபுரம்-1 | MBC | W-Des Wid(p) |
| 4. | ஆவுடையார்கோவில் | ஆர்.புதுப்பட்டிணம் மேலக்குடியிருப்பு | BC | Priority |
| 5. | கந்தர்வகோட்டை | வேலாடிபட்டி | GT | WD Widow(NP) |
| 6. | கறம்பக்குடி | தெற்கிக்காடு-1 | SC | Non-Pri. |
| 7. | குன்றாண்டார்கோவில் | கீரனுார்(புதியது) | MBC | WD Wid(NP) |
| 8. | மணமேல்குடி | பொன்னகரம் | BC | WD Wid(NP) |
| 9. | பொன்னமராவதி | மேலச்சிவபுரி | GT | WDwid (NP) |
| 10. | புதுக்கோட்டை | தொண்டைமான்நகர் | BC | Non-Priority |
| 11. | திருமயம் | பாப்பாவயல் | GT | Non-Priority |
| 12. | திருவரங்குளம் | காசிம்புதுப்பேட்டை | SC | WD Wid(NP) |
| 13. | விராலிமலை | பெரியார்நகர் | MBC | Non Priority |

மேற்கண்ட இனச்சுழற்சி முறைகள் குழந்தைகள் நல காப்பக பணியாளர் மற்றும் குழந்தைகள் காப்பக சமையலருடன் இணைந்த உதவியாளர் பணியிடங்களுக்கும் பொருந்தும் என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

விண்ணப்பங்கள் தினசரி நாளிதழ்களில் செய்தி வெளியானதில் இருந்து 6.9.2016 மாலை 5 மணி வரை அந்தந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களில் நேரிடையாக அல்லது தபால் மூலமாக விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**